எனது இல :JF/RES/HOUSING/i/01/2021(i)
மீள்குடியேற்ற கிளை
மாவட்டச்செயலகம்
யாழ்ப்பாணம்
19.07.2021

**தகவல்தொழில்நுட்ப உத்தியோகத்தர்**
தகவல்தொழில்நுட்ப கிளை
மாவட்டச்செயலகம்
யாழ்ப்பாணம்

**மாவட்டச்செயலக இணையத்தளத்தில் செய்தி பிரசுரித்தல்**

இத்துடன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தினை மாவட்டடச்செயலக இணையத்தளத்தில் 19.07.2021 தொடக்கம் 26.07.2021 ந் திகதி வரை காட்சிப்படுத்தல்

**<u>ஓப்பந்த அடிப்படையிலான தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல்</u>**

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறைமற்றும் கட்டடப்பொருட்கள் தொழில்மேம்பாட்டு இராஜங்க அமைச்சினால் இவ்வருடம் யாழ் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ரூபா 01 மில்லியன் மற்றும் 0.6 மில்லின் பெறுமதியான வீடமைப்பு திட்டத்தினை தொழில்நுட்ப மேற்பார்வை செய்தலின் பொருட்டு ஓப்பந்த அடிப்படையிலான தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஏற்கப்படும் கல்வித்தகமை**

- தேசிய பயிலுநர் மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் தேசியபொறியியல் டிப்ளோமா (சிவில் ) சான்றிதழ் அல்லது
- கல்வி உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் சான்றிதழ் (சிவில் )

**அனுபவம்**

- பயனாளியினால் அமைக்கப்படும் வீடமைப்பு திட்ட (Owner driven Housing Project ) தொழில்நுட்ப மேற்பார்வையில் ஆகக்குறைந்தது மூன்று வருட முன் அனுபவம்.

விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஏதுவாக தங்களது சுயவிபரக்கோவையினை (தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தினையும் உள்ளடக்கவும்) 24.07.2021 ந் திகதிக்கு முன்னர் jfrenewhouse@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்வதோடு சுயவிபரக்கோவையின் வன்பிரதியை மேலதிக அரசாங்க அதிபர் (காணி) , மாவட்டச்செயலகம். யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.

நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 26.07.2021 ந் திகதி மாவட்டச்செயலகத்தில் நடைபெறும். இவ்நேர்முகப்பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்கள் தொலைபேசி அறியத்தரப்படும்.

**சு.முரளிதரன்**
மேலதிக அரசாங்க அதிபர்- காணி

சு. முரளிதரன்
மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி)
மாவட்டச் செயலாளருக்காக
யாழ். மாவட்டம்